1970 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் வளர்ப்பதற்காகவும் இதுமாதிரி எளிய முறையில் கோழிகள் விநியோகிப்பதற்காகவும் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. விரைவில் அது அமுலாக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பண்ணைகள் கிராமப்புறங்களுக்கு அருகில் இல்லாமலும், நகர் புறங்களுக்கு அருகில் இல்லாமலும், அனந்திர வெளியிலே இருப் பதன் காரணமாக, அங்கே செயல்படுகிற அதிகாரிகளுக்கும், அலு வலர்களுக்கும் எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் இருப்பதன் காரணமாக, ஓரளவுக்கு குறைந்தபட்சம் கிராமப்புறங்களை ஒட்டி யோ அல்லது நகர்ப்புறங்களை ஒட்டியோ அத்தகைய பண்ணைகளை அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கத்தினால் நடத்தப் படுகின்ற கோழிப் பண்ணைகள் எங்கிருந்தாலும் விவசாயிகளுக்கு இந்தக் கோழிகளைக் கொண்டு வந்து மலிவான விலையில் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் புதிய திட்டம் வகுத்திருக் கிறது. விரைவிலே அது அமுலாக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : கோவை மாவட்டத்தில் அரசலூரில் கோழிப் பண்ணைக்காக ஒரு லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் ஏற்படுத்தப்பட்டு, அந்தக் கோழிப் பண்ணையை இப்பொழுது நிரந்தரமாக மூடிவிட்டார்கள். கட்டடம் சும்மா இருக்கிறது. அதில் வேறு ஏதாவது செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா? அல்லது மீண்டும் கோழிப் பண்ணையை அங்கே நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைப்பற்றி விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

கால்நடைகளுக்குக் கோமாரி நோய்

13 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டத்தில் கால்நடைகளுக்குக் கோமாரி நோய் என்கிற தொத்து நோய் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(இ) எந்தெந்தப் பகுதிகளில்?

(உ) இதுவரை அதனால் எத்தனை ஆடு-மாடு முதலியவை செத்து விட்டன?

(எ) சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) முதல் (எ) வரை : வினாக்களுக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், திருவண்ணாமலைப் பகுதியிலும், செய்யாறு போன்ற பகுதிகளிலும் இது போன்று கோமாரி தொத்து நோய் ஏற்பட்டது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதன் விளைவாகப் பல ஆடு மாடுகள் இறந்திருக்கின்றன. ஆனால், அரசாங்கத்திற்கு ரிபோர்ட்டு வராமல் இருக்கலாம். இதை முன் கூட்டியே உணர்ந்தாவது தடுப்பு ஊசிகள் போட்டுத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, திருவண்ணாமலை, செய்யாறு பகுதிகளில் கோமாரி நோய் வந்ததாக இல்லை. வேறு சில நோய்கள் வந்திருப்பதாகத்தான் இருக்கிறது. தொண்டை அடைப்பான் நோய், குதிரை நோய், அம்மை நோய் போன்ற நோய்கள் வந்து கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. தடுப்பு ஊசிகள் போடப்பட்டு, அவைகள் பாதுகாக்கப்படுகின்றன.

திரு. இல. பலராமன் : வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுகாவில் தொண்டை அடைப்பான் நோய் வந்து கால்நடைகள் பாதிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்கு வேண்டிய மருந்துகள் இல்லை என்று கால்நடை விஸ்தரிப்பு அதிகாரிகள் கூறுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதை நிவர்த்திக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினிடம் உள்ள தகவல்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, கால்நடைகளுக்கு ஊசி குத்தப்பட்டு அந்த வியாதிகள் குறைக்கப்படுகின்றன, தடுக்கப்படுகின்றன என்றுதான் செய்தி இருக்கிறது.

Steel Tube Plant

*14 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether there are proposals under the consideration of the Government to locate a seamless steel plant in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) ஆம். இந்திய அரசு நிறுவனமாகிய திருச்சிராப்பள்ளி "பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ்" நிறுவனத்துடன் கூட்டு முயற்சியாக, இம் மாநிலத்தில் "வெட்டு வாயில்லாத உருக்குக் குழாய்த் தொழிற்சாலை ஒன்றை (Seamless Steel Tube Plant) நிறுவுவதற்கு இந்திய அரசின் அதிகார பத்திரத்தைப் பெற வேண்டி, தமிழ்நாடு அரசிற்கு முழுவதும் சொந்தமாகிய தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.

(இ) திட்டமிடப்பட்ட இந்தத் தொழிற்சாலையின் நிறுவப்பட்ட திறனளவு ஆண்டொன்றுக்கு சுமார் 60,000 டன்கை இருக்கும். கொதி கலன்களுக்கும் இரசாயனத் தொழிற்சாலைகளுக்கும்